பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 01 திங்கட்கிழமை 14.04.2025 கதிர் 157

## இது ரகசியம் அல்ல!

ஆளும் தரப்புக்குள் இப்போது சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க அணி ஒன்று ஜனாதிபதி அநுரகுமார அணி ஒன்று என இரு தரப்புக்கள் இருக்கின்றன போல் உள்ளது. ☞2

# பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம் தொடர்பில் ஆராய குழு நியமனம்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வது குறித்து ஆராய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி றியன்சி அர்சகுலரத்ன நியமிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

மே மாத தொடக்கத்தில் பொதுமக்களின் கருத்தையும் சிவில் சமூக அமைப்புகளின் கருத்துக்களையும் பெற நடவடிக்கை எடுக்கவும், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சமூகங்களின் கருத்துக்களையும் பெறவும் குழுவிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்வது தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தலைமையில் ☞2

## எறும்புக் கடியால் குழந்தை இறப்பு

### யாழ்ப்பாணத்தில் பரிதாபம்

பிறந்து இருபத்தியொரு நாளேயான பெண் சிசு ஒன்று எறுப்புக் கடிக்கு இலக்காகி உயிரிழந்த பரிதாபகரமான சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆலடி உடுவில் மானிப்பாயைச் ☞2

## மூன்றே மாதங்களில் 30 துப்பாக்கிச் சூடுகள் 30 பேர் உயிரிழப்பு

கடந்த மூன்று மாதங்களில் முப்பது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கையும் முப்பது என்று ☞2

## 16 சிறுவர்கள் மீது பாலியல் துன்புறுத்தல் கிளிநொச்சியில் பயிற்றுநர் நேற்று கைது

கிளிநொச்சியில் 16 சிறுவர்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் என்று குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள விளையாட்டு பயிற்றுநர் ஒருவர் நேற்று பகல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்தசிலநாட்களாகதலைமறைவாக இருந்து வந்து சந்தேகநபர் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக விரைந்து செயற்பட்ட கிளிநொச்சி குற்றத்தடுப்புப் பொலிஸார் அறிவியல் நகர் பகுதியில் வைத்து அவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றார். மேலதிக சட்டநடவடிக்கைக்காக சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

## சகவாழ்வை ஊக்குவித்து கருணையை காட்டுவோம்

### ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்து



சகவாழ்வை ஊக்குவித்து மற்றவர்கள் மீது கருணை காட்டும் ஒழுக்கத்தின் இருப்பை எமக்குள் எற்படுத்திக்கொள்வதே இந்தப் புத்தாண்டில் நமது பொறுப்பாகும். நாம் புதிதாவதால் மாத்திரமே புத்தாண்டு நமது வாழ்விற்கு புதிய ஆரம்பத்தை தரும். நாட்டிற்குத் தேவையான புதிய பொருளாதார சமூக மற்றும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தேசிய திட்டத்தை வெற்றிபெறச் ☞2

## கடலோர பாதுகாப்புக்கு அவசர எண் அறிமுகம்

இலங்கை கடலோர பாதுகாப்பு திணைக்களத்தினால் 24 மணித்தியால அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சமுத்திர பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 106 எனும் ☞8

## இலங்கையில் இன நல்லிணக்கத்தை உருவாக்கி அமைதியை ஏற்படுத்த முன்னின்று உழைப்போம்

### அமைச்சர் சந்திரசேகரன் புத்தாண்டு வாழ்த்து

இலங்கையில் இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் நிலையானதொரு அமைதியை ஏற்படுத்துவதற்கு நாம் முன்னெடுத்துவரும் முயற்சிகளுக்கு இந்த தமிழ், சிங்கள புத்தாண்டும் ஓர் உந்துதலாக அமையும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் கூறப்பட்டுள்ளவை வருமாறு-

' மலர இருக்கும் விசுவாசுவ வருடமானது, எல்லா மக்களுக்கும் ☞8

## மகிழ்ச்சியும் செல்வமும் நிறைந்த புத்தாண்டுக்காக ஒன்றிணைவோம்

### எதிர்க் கட்சித் தலைவர் வாழ்த்து



துக்கம் கண்ணீர் இல்லாமல் மகிழ்ச்சியும் செல்வமும் நிறைந்த புத்தாண்டுக்காக ஒன்றிணைவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியிலேயே ☞2

## செஞ்சொற்செல்வரின் புத்தாண்டு ஆசியுரை

### இறையருளால் அனைவரும் மகிழ்வுற்று வாழ பிரார்த்திக்கிறேன்.

புதிய "விசுவாவசு" வருடம் மங்களகரமாகப் பிறக்கிறது. புதுவருட நாளில் அனைவரும் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்யுங்கள்.

தாய், தந்தையின் பாதம் பணிந்து நல்லாசி பெறுங்கள். மூத்தோர்களை நாடிச்சென்று அவர்களின் அன்பையும், ஆசிகளையும் நிறைவாகப் பெறுக்கொள்ளுங்கள்.

புதிய வருடத்தில் புதிய ☞2

# எரிபொருள் மாபியாவிற்கு அடிபணியும் ஆளும்தரப்பு

## புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை ஒழிக்க முயற்சி எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

புதைபடிவ எரிபொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஆற்றலைவிட நீர், காற்று, சூரிய சக்தி போன்றவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மலிவானது. தற்போதைய அரசாங்கம் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு முன்னுரிமை வழங்குவோம் என தேர்தல் காலத்தில் கூறியது. ஆனால் இன்று டீசல் மாபியாவுக்கும், அனல் மின் மாபியாவுக்கும் அடிபணிந்து புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை இல்லாதொழிக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்திக்குக் கடும் கட்டுப்பாடுகளை விதித்து, அனுமதிகளைத தாமதப்படுத்தி, டீசல் மின் உற்பத்தி நிலைய மாபியாவிற்கு இடம்கொடுத்து வருகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளுராட்சி மன்றத் தேர்தலை இலக்காக் கொண்டு, நீர்கொழும்பு தேர்தல் தொகுதிக்குட்பட்ட தளுவாகொடுவ பிரதேச மக்களை தெளிவூட்டும் வகையில் நேற்று நடைபெற்ற வட்டார மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் பெரும்பான்மையான மக்கள் தற்போது பெரும் சிரமத்துக்கும் அழுத்தத்திற்கும் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். கற்பனைக்கு எட்டாத வகையில் பொருட்களின் விலைகள் அதிகரித்து, வாழ்க்கைச் சுமை அதிகரித்து, மக்களின் வாழ்க்கை அழிந்து, அசௌகரியமும், மன அழுத்தமும் அதிகரித்து அன்றாட வாழ்க்கையை எவ்வாறு நடத்துவது என்ற பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

நல்ல உணவுகளைப் பெற்றுக் கொடுத்தல், குழந்தைகளுக்கு ☞2

## தமிழ்க் கட்சிகளை இணைய வருமாறு தமிழ்த் தேசியப் பேரவை அழைப்பு



வேறு எந்த தமிழ்க் கட்சியையும் இணைத்துக்கொள்ள தமிழ்த் தேசியப் பேரவை தயாராகவே இருக்கின்றது என்று தமிழ்த் தேசியப் பேரவையின் ☞8



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இப்படி இரு அணிகளாகித்தான் தமிழ் அரசுக் கட்சி மோசமான பின்னடைவுகளைச் சந்தித்தது. இப்போது ஆளும்தரப்பு இரு அணிகளாகி வருவதாகத் தெரிகிறது. ஜனாதிபதி அணி எதைச் சொன்னாலும் செய்தாலும் அதற்கு எதிராகக் கருத்துச் சொல்வதும் செய்வதும் பிமல் ரத்நாயக்க அணியின் பாணியாக இருக்கின்றது. நாடாளுமன்றத்திலும் பிமலின் செயற்பாடுகள் தொடர்பாக ஏனைய கட்சிகள் கடும் அதிருப்தி கொண்டுள்ளன. இது குறித்து அண்மையில் ஜனாதிபதி தலைமையில் கூடிய அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தின் முடிவில் கூடப் பலர் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதியிடம் முறையிட்டனர்.

இப்போது என்னடாவென்றால் உள்ளாட்சி சபைத் தேர்தல் நடந்து முடிந்த கையோடு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று பிமல் ரத்நாயக்க தெரிவித்திருக்கிறார். தொடர்ந்து தேர்தல்களையே நடத்திக்கொண்டிருக்க முடியாது, அதனால் இந்த ஆண்டில் இனித் தேர்தல் எதுவும் நடத்தப்படாது, அடுத்த ஆண்டுதான் மாகாண சபைத் தேர்தல் என்று ஆளும் தரப்பின் ஏனைய அமைச்சர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். சில நாள்கள் முன்பாக தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் பேசிய ஜனாதிபதியும்கூட இந்தச் சாரப்படக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

வருடம் முழுவதும் தேர்தல்களையே நடத்திக் கொண்டிருக்க முடியாது. வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை அடுத்த 6 மாத காலத்தில் செலவழித்து முடிக்கவேண்டி இருக்கிறது. தேர்தலை நடத்திக்கொண்டிருந்தால் இந்த வேலைகளை எல்லாம் செய்ய முடியாது என்கிற வகையில் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்திருந்தார். ஆனால் பிமல் ரத்நாயக்கவோ உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பிறகு மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்படும் என்று தெரிவித்திருக்கிறார்.

இது என்னடா மதுரைக்கு வந்த சோதனை என்ற கதையாக, மாகாண சபைத் தேர்தல் வருமா வராதா? அரசியல் கட்சிகளைப் பதற்றத்தில் வைத்திருப்பதே இவர்களுக்கு வேலையாகப் போய்விட்டதுபோலும். சூட்டோடு சூடாக மாகாண சபைத் தேர்தலையும் நடத்திவிட்டால் அவற்றையும் தேசிய மக்கள் சக்தியே கைப்பற்றிக்கொள்ளலாம். இப்போதே ஆளும்தரப்புக்கு எதிரான உணர்வலைகள் மக்கள் மத்தியில் பொங்கிப் பிரவகிக்கத் தொடங்கிவிட்ட நிலையில் இன்னும் கால தாமதமானால், அதாவது அடுத்த வருடத்தில் மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் ஆளும் தரப்பு வெற்றி வாய்ப்பை இழந்துவிடும் என்று பிமல் கருதுகிறார் போலும். அதனால்தான் உடனடியாக மாகாண சபைத் தேர்தல் என்கிறார் அவர். ஆக மொத்தத்தில் மாகாண சபைத் தேர்தல் வரும் ஆனால் வரா-து என்பதுதான் இப்போதைய நிலை.

.........................................................................

தேர்தல் ஆணைக் குழுவினருக்கும் சட்ட மாஅதிபர் திணைக்களத்தினருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பைத் தொடர்ந்து, மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வதில்லை என்கிற முடிவுக்கு ஆணைக்குழு வந்திருக்கின்றது என்று அறியமுடிகிறது. ஆணைக்குழுவிற்குள் ஒரு உறுப்பினரைத் திவிர மற்றையவர்கள் சட்டமாஅதிபர் திணைக்களத்தின் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போய் தேர்தலை முடிந்தவரையில் விக்கினங்கள் இல்லாமல் நடத்தி முடிப்பதில்தான் ஆர்வமாக இருக்கிறார்கள் என்பதை ஏற்கனவே சொல்லியிருந்தேன்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சந்திப்பிலும் இதுவே பிரதிபலித்ததன் விளைவாக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்குப் பதிலாக, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை ஏற்று, அந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவிட்ட வேட்புமனுக்களையும் சேர்த்து தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

வேட்புமனுக்கள் நிராகரிப்புத் தொடர்பில் உயர் நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் ஒன்றுக்கொன்று முரணான வகையில் உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளமை பிரச்சினையாக உருமாறி இருந்தாலும், அதற்கொரு தீர்வைப் பெற்று நீதியான, நேர்மையான தேர்தலை நடத்தும் மனோநிலையில் தேர்தல் ஆணைக்குழு இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. சட்டச் சிக்கல்களைத் தவிர்த்துவிட்டு எப்படியாவது தேர்தலை நடத்திவிடுவதில்தான் திணைக்களம் அக்கறை காட்டுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இருப்பினும் நீதிமன்ற உத்தரவுகளுக்கு இடையிலான முரண்பாடுகள் தொடர்பில் தேர்தல் திணைக்களம் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யவில்லை என்றாலும் வேறு தரப்புக்கள் அத்தகைய மேன்முறையீட்டைச் செய்யக்கூடிய சாத்தியங்கள் இருப்பதால் இந்த விவகாரம் இன்னும் தெளிவாக ஒரு முடிவுக்கு வரவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பயங்கரவாதத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 11 ஆம் திகதி நீதி அமைச்சில் நடைபெற்றது.

தற்போதுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வதே தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை இந்தக் கலந்துரையாடலின் போது நீதி அமைச்சர் தெரிவித்தார்.

புதிய சட்ட முன்வரைவு உலகளாவிய பயங்கரவாதத்தையும் சவால்களையும் எதிர்கொள்ளக்கூடிய ஒரு மசோதாவாக இருக்க வேண்டும் என்றும், இந்த நாட்டின் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்திற்கான மனித உரிமைகளை மீறக்கூடாது என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

இந்தத் திருத்தச் சட்டங்களைக் கொண்டுவருவதற்கு முந்தைய அரசாங்கங்கள் உரிய முறையில் செயற்படவில்லை எனவும், தற்போது நியமிக்கப்பட்ட குழு, இந்தச் சட்டத்தை இரத்து செய்வது தொடர்பான பொருத்தமான விடயங்களை மிகக் குறுகிய காலத்திற்குள் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் நீதி அமைச்சர் குழுவின் உறுப்பினர்களுக்கு தெரிவித்ததாக நீதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## எறும்புக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த தம்பதியினருக்கு மார்ச் 22 பெண் சிசு பிறந்தது. சில நாட்களுக்கு முன்னர் சிசுவை எறும்புகள் கடித்த நிலையில் பெற்றோர் அது குறித்து பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. ஆனால், சனிக்கிழமை அதிகாலை பால் குடித்த சிசு மயக்கமடைந்தது. உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு சிசு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

உடற்கூற்று பரிசோதனையில், எறும்பு கடித்ததன் காரணமாக கிருமி தொற்று ஏற்பட்டு உடற்கூறுகளின் செல்கள் செயலிழந்தமையால் இறப்புச் சம்பவித்துள்ளது தெரியவந்துள்ளது.

## செஞ்சொற்செல்வரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணங்களோடு, நற்காரியங்களைச் செய்வதற்கு முன்வாருங்கள். காலம் மிகவும் பெறுமதியானது, போன நாள்கள் திரும்பிவரப் போவதில்லை. இந்த உண்மையை நாம் உணர வேண்டும். இந்தப் பிறவி எமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு.

இப்பிறவியில், நாம் மகிழ்ச்சியாக வாழ்ந்து, பிறரையும் மகிழ்ச்சியாக வாழ வைப்பதே எம் கடமையாகும். வாழ்நாளில் இதுவரை நாம் எதைச் சாதித்தோம், என்ற கேள்வி வருடங்கள் கடக்கின்ற போதெல்லாம் எம்மிடையே எழ வேண்டும். இன்று எம் சூழலில் ஒருவரையொருவர் குறைகூறுவதில் காலத்தைக் கழிக்கிறோம்.

குறைகளைச் சொல்வதற்கு முதல் 'நாம் இதுவரை என்ன பயனுள்ள காரியங்களைச் செய்தோம்' என எண்ணுதல் வேண்டும்.

'உன்னை நீ திருத்திக்கொள் சமுதாயம் தானாகத் திருந்தும்' என்ற மூத்தோர் வார்த்தைகள் மிகவும் பெறுமதியானவை. ஏக காலத்திற்கும் பொருத்தமானவை.

புதிய ஆண்டு எம் மண்ணில் புதுமைகள் நடைபெறவேண்டும். நீதி தழைக்கவேண்டும். அரசியலில் உண்மையான அறம் பேண வேண்டும். இளைய தலைமுறையினரை அன்பினா ல்ஆற்றுப்படுத்த வேண்டும். எங்கும் ஆனந்தம் பெருக வேண்டும். உலகில் நடைபெறும் போர்கள் ஒடுங்க வேண்டும். எல்லோரும் உரிமைகளோடு வாழும் மனிதப்பண்பு வலுக்க வேண்டும்.

உயர்ந்த எண்ணங்களோடு அனைவரும் வாழ வேண்டும். அனைவருக்கும் இதயபூர்வமான புத்தாண்டு வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறி அமைகிறேன் - என்றுள்ளது.

# அன்பர்கள், நண்பர்கள், வாசகர்கள் அனைவருக்கும் எமது சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள் !

**சித்திரைப்புத்தாண்டு விடுமுறை காரணமாக இன்றைய தினம் மாலைக்கதிர் பத்திரிகையும் நாளைய தினம் காலைக்கதிர் பத்திரிகையும் வெளிவராது..**

## மூன்றே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதாள உலக துப்பாக்கிச் சூடுகளின் விளைவாக பத்தொன்பது பேர் இறந்துள்ளனர். சமீப காலமாக பாதாள உலக நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## சகவாழ்வை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யவும் நாட்டையும் மக்களையும் வெற்றிபெறச் செய்வதற்காகவும் இந்த புத்தாண்டில் அனைவரும் மேலும் வலிமையுடனும் ஒற்றுமையுடனும் ஒரே நோக்கத்திற்காக ஒன்றுபடுவோம் என அனைவருக்கும் நான் அழைப்புவிடுக்கிறேன் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விடுத்துள்ள சித்திரை புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பௌதீக மற்றும் ஆன்மீக ரீதியாக புதிதாகும் எதிர்பார்ப்புகளை அடையாளப்படுத்தும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை நாடு என்ற வகையில் பல வெற்றிகளை அடைந்துகொண்டு சிறந்த மற்றும் புதியதொரு தேசத்தை உருவாக்கும் கனவிற்காக இடைவிடாமல் போராடும் வேளையில் நாம் கொண்டாடுகிறோம்.

வீழ்ச்சியடைந்திருந்த நமது நாட்டை கடந்த சில மாதங்களாக மீண்டும் கட்டியெழுப்பி பொருளாதார சமூக அரசியல் ரீதியாக புதிய நிலைக்கு உயர்த்தி வைத்துள்ளோம். அந்த வெற்றிகள் அனைத்தும் இந்நாட்டு மக்களுக்கே உரித்தாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் மக்கள் எம் மீது வைத்த நம்பிக்கையே நாட்டில் மாற்றம் ஏற்படுவதற்கு வழிவகுத்தது என்பதையும் வலியுறுத்த வேண்டும்.

சவால்களுக்கு மத்தியில் சரிந்துவிடாமல் நாட்டிற்காக நமது பொறுப்பை மேலும் வலுவாக நிறைவேற்றும் துணிச்சல் எமக்கு உள்ளது. மேலும் பூகோள அரசியலை போன்றே தேசிய ரீதியாக நாட்டின் முன்பிருக்கும் அனைத்து விதமான சவால்களையும் எதிர்கொள்ளத் தேவையான திட்டங்களை அரசாங்கம் தற்போது செயல்படுத்தி வருகிறது.

மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான பௌதீக மற்றும் ஆன்மீகத் தொடர்புகளின் தனித்துவம் புத்தாண்டு மரபுகளினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவை சிங்கள மற்றும் தமிழ் இனங்களுக்கு இடையில் காணப்பட்ட வரலாற்று பிணைப்பு மற்றும் சகவாழ்வின் உயிர்ப்புள்ள சான்றாக விளங்குகின்றன.

இன்றைய சமூகம் பல்வேறு பிரிவுகளால் வேறுபட்டிருந்தாலும் இ புத்தாண்டு போன்ற கொண்டாட்டங்கள் அத்தகைய பிரிவுகளை கலைந்து சமூகத்திற்குள் மீண்டும் ஒற்றுமை இ நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வைப் பாதுகாப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளன. சகவாழ்வை ஊக்குவித்து மற்றவர்கள் மீது கருணை காட்டும் ஒழுக்கத்தின் இருப்பை எமக்குள் எற்படுத்திக்கொள்வதே இந்தப் புத்தாண்டில் நமது பொறுப்பாகும்.

மேலும் மக்கள் வாழ்வை புதுப்பித்துக் கொள்ளவும் பிற்போக்கான மனப்பாங்கு மற்றும் சிந்தனை அற்ற புதிய மனிதனை உருவாக்குவதுமே சூரிய பெயர்ச்சியுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் அனைத்து சம்பிரதாயங்களினதும் பொதுவான எதிர்பார்ப்பாகும். இவ்வாறு நாம் புதிதாவதால் மாத்திரமே புத்தாண்டு நமது வாழ்விற்கு புதிய ஆரம்பத்தை தரும்.

நாட்டிற்குத் தேவையான புதிய பொருளாதார சமூக மற்றும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தேசிய திட்டத்தை வெற்றிபெறச் செய்யவும் நாட்டையும் மக்களையும் வெற்றிபெறச் செய்வதற்காகவும் இந்த புத்தாண்டில் அனைவரும் மேலும் வலிமையுடனும் ஒற்றுமையுடனும் ஒரே நோக்கத்திற்காக ஒன்றுபடுவோம் என அனைவருக்கும் நான் அழைப்புவிடுக்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் 'வளமான நாடு - அழகான வாழ்க்கை' நோக்கிய பயணத்தின் எதிர்பார்ப்புக்களை ஒளிரச்செய்யும் செழிப்பான புத்தாண்டாக அமையட்டும்!

## எரிபொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி வழங்குதல் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை நடத்துதல் ஆகியவையும் கடுமையான பிரச்சினைகளாக மாறிவிட்டன. பொருட்களின் விலைகள் அதிகரித்தாலும், வாழ்க்கைச் செலவு அதிகரித்தாலும், மக்களைப் பலிகொடுத்து ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி அரசாங்கத்திற்கு மக்கள் படும் இன்னல்கள் புரியவில்லை.

தற்போது அரிசி, தேங்காய் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் கூட அதிகரித்துள்ளதோடு, வற் வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் இல்லை. இவற்றுக்கு பதில்களும் இல்லை. எடுக்கும் முயற்சிகளையும் காணவில்லை. இது குறித்து சபையில் கேள்வி எழுப்பினால் 76 வருடங்கள் குறித்து குறை கூறுகின்றனர். எங்களுக்கு தெரியும் என்றும் கூறுகின்றனர். அரசிற்கு தெளிவான கொள்கை இல்லாமையே இதற்கு முதற் காரணமாகும். மக்கள் தமது வருமான மூலங்களை இழந்துள்ளமையால் வறுமை அதிகரித்து வருகிறது. இந்த தருணத்தில் நாட்டில் வறுமை நிலை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன், 33 சதவீதத்தால் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்போம் என்றனர். எண்ணெய் விலையைக் குறைப்போம் என்றனர். இதில் நடந்து வரும் திருட்டு, ஊழல், மோசடிகளை ஒழிப்போம், இவற்றின் விலைகளைக் குறைத்து மக்களுக்கு சலுகை விலையில் தருவோம் என்றனர். ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை. எடுக்கும் நடவடிக்கைகளையும் காணவில்லை. இதனால் விவசாயிகள், மீனவர்கள், தொழில் முனைவோர்கள் கூட நிர்க்கதிகளை முகம்கொடுத்து வருகின்றனர். பொருட்களின் விலையை கட்டுப்படுத்தும் திட்டம் எதுவும் இந்த அரசாங்கத்திடம் இல்லை. வருமானங்கள் குறைந்துள்ள தருணத்தில், பொருட்களின் விலைகள் தாறுமாறாக அதிகரித்துள்ளன என்றார்.

## மகிழ்ச்சியும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையர்களின் சிறப்பான கலாசார விழாவான சிங்கள தமிழ் புத்தாண்டுக்காக எமது நாட்டின் அன்பான மக்களுக்கு வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். சூரியன் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்குள் செல்லுவதை பாரம்பரியமாக புத்தாண்டின் பிறப்பு அல்லது சூரிய பகவானைக்

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

# ஆயிரத்து 500 சிங்களக் குடும்பங்களை வவுனியாவில் குடியமர்த்த முயற்சி

## இதை சுட்டிக் காட்ட முதுகெலும்பற்ற அடைக்கலநாதன் கஜேந்திரன் காட்டம்

கீழ் மல்வத்து ஓயா திட்டத்தின் கீழ் வவுனியாவில் 1500 சிங்கள குடும்பங்களை குடியமர்த்த முயல்கிறார்கள்.இதைசுட்டிக்காட்ட முதுகெலும்பற்ற அடைக்கலநாதன் தான் வரவு செலவுத் திட்டத்தில் நன்மை இருப்பதாக கூறி அதை ஆதரித்துள்ளார். ஏன் என்று சொன்னால் சர்வதேச சமூகத்தின் முன்னால் அவர் அரசை பாதுகாக்கின்றார் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 2009 ஆம் ஆண்டு கொடூரமான முறையில் எமது விடுதலைப் போராட்டத்தை அரசாங்கம் அடக்கிய போது எதிர்வரும் 50 வருடங்களுக்கு தமிழ் மக்கள் தமது இருப்பை பற்றி சிந்திக்க கூடாது என்று கருதியே கொடூரமாக செயற்பட்டது. பலர் கைது செய்யப்பட்டும், கொடுமைப்படுத்தப்பட்டார்கள். ஆனல் இன்று வேட்பாளர்களை பார்க்கின்ற போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. எமது தமிழ் தேசிய இனத்தின் உரிமைக்கான குரல் வலுவாக இருக்கின்றது.

ஒற்றையாட்சிக்குள் தமிழ் மக்களுக்கு தீர்வு இல்லை என்பது தெட்டத்தெளிவானது. நாங்கள் தோற்றுப் போனாலும் ஒரு கொள்கையோடு நின்று தோற்றுப் போனார்கள் என்ற வரலாறு படியட்டும் என்று தான் கடந்த காலங்களில் இருந்து செயற்பட்டு வருகின்றோம்.

தமிழ் தேசிய பேரவை உதயமாகியதை நினைத்து மகிழ்சியடைகின்றோம். மரணித்த மாவீரர்களின் தியாகங்களுக்கு வலிமை இருக்கின்றது என்று உணர்கின்றேன். அடிமையாக வாழக் கூடாது என்பதற்காக நாம் எப்படி செயற்பட வேண்டும் என்று தான் பாடங்களை படிக்க வேண்டும். நாங்கள் பொறுப்பற்ற முடிவுகளை எடுத்திருக்கவில்லை. மக்களுடைய இருப்பு சார்ந்தே ஒவ்வொரு முடிவுகளையும் எடுத்துள்ளோம்.

அழிவின்விளிம்பில்இருக்கின்றஇந்தமாவட்டத்தை பாதுகாப்பதற்காக யுத்தம் முடிந்து 15 வருடங்களுக்கு பின்பும் இளைஞர்கள் உயிர் கொடுக்கும் வகையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

வெடுக்குநாறி மலையில் புத்த விகாரையை நிறுவி அதனை பௌத்தமயமாக்க முயன்ற போது மக்கள் திரண்டு அதற்கு எதிராக போராடியிருக்கிறார்கள். நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றாலும் மக்கள் போராட்டங்களே அந்த ஆக்கிரமிப்பை தடுத்துள்ளன. இந்த இளைஞர்களைக் கட்டுப்படுத்த தொல்பொருட் திணைக்களமும், பொலிஸாரும் இணைந்து செயற்பட்டனர். வவுனியா சிறைச்சாலைக்குள் மிருகங்கள் கூட வாழ முடியாது. அவ்வாறாக சிறைச்சாலைக்குள் எமது இளைஞர்கள் அடைக்கப்பட்டார்கள். இதன் மூலம் அவர்களை முடக்க நடவடிக்கை எடுத்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் தமிழினமாக ஒற்றுபட்டு போராடி அவர்களுக்கு விடுதலை கிடைத்தது.

அவர்கள் போராடி இருக்கவில்லை என்றால் குருந்தூர் மலை போன்று வெடுக்குநாறியில் புத்தர் கோவில் இருந்திருக்கும். 2009 ஆம் ஆண்டுக்கு பின் தமிழ் மக்களின் தலைமைச் சக்தி என்று தாம்பாளத்தில் வைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கொடுக்கப்பட்டது. 2009 வரை விடுதலைப் புலிகள் ஆக்கிரமிப்பை தடுத்தார்கள். 2009 இற்கு பின் 2013 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஸ அரசால் கொக்கசான்குளம் பகுதியில் சிங்கள குடியேற்றம் உருவாக்கப்பட்டு 2015 இல் நல்லாட்சிக் காலத்தில் வவுனியா சைவப்பிரகாச கல்லூரியில் வைத்து உறுதிகள் வழங்கப்பட்டன. அதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரனும், செல்வம் அடைக்கலநாதனும், மைத்திரிபால சிறிசேனவுடன் சேர்ந்து சிங்கள குடும்பங்களுக்கு உறுதிகளை வழங்கி வைத்தார்கள்.

இன்று வவுனியா வடக்கு பிரதேச சபையில் 5 சிங்கள பிரதிநிதிகள் வருவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது. சிங்கள பேரினவாதம் மட்டும் எங்களது அழிவுக்கு காரணமாக இருக்கவில்லை. காலம் காலமாக சிங்கள பேரினவாதிகள் எங்களது தரப்பில் இருந்து விலைபோகக் கூடிய சலுகைகளுக்கு அடிபணியக் கூடியவர்களை பக்கத்தில் வைத்துக் கொண்டு தான் அனைத்து காரியங்களையும் ஒப்பேற்றியுள்ளார்கள். இந்த நிலைமை தடுக்கப்பட வேண்டுமாக இருந்தால் எங்களது அணி வெற்றி பெறவேண்டும்.

மக்கள் சக்திக்கு ஒரு வலிமை இருக்கிறது. அது உறுதியாக இருந்தால் வெற்றி பெறும். ஆகவே, உறுதியாக நிற்கக் கூடிய ஒரு தரப்பை பலப்படுத்த வேண்டியது மக்களது கடமை. அந்த கடமையை மக்கள் சரியாக செய்தால் ஒவ்வொருவரும் சபைகளில் வெற்றி பெற்று, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் உங்கள் கருத்துக்களுக்கு பெறுமதி இருக்கும். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு பின்னால் நீங்கள் எலலோரும் இருக்கின்றீர்கள் என்றால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினுடைய கருத்துக்கு வலிமை இருக்கும். அதனை சர்வதேச சமூகம் தட்டிக் கழிக்க முடியது.

ஆகவே, நீங்கள் ஆற்ற வேண்டிய கடமை என்பது மக்களிடம் சென்று நியாயங்களைச் சொல்லுங்கள். தமிழ் தேசியத்தின் பால் உறுதி கொண்டவர்கள் எம்முடன் கை கோர்த்துள்ளார்கள். ஜனநாயக தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய கட்சி, அருந்தவபாலன் ஐயா, ஐங்கரநேசன் ஐயா என எம்முடன் இணைந்துள்ளார்கள். சிறிகாந்தா ஐயா ஜனநாயகதமிழ் தேசியக்கூட்டணியில் இருந்தார்கள். செல்வம் அடைக்கலநாதன் வரவு செலவுத்திட்டத்தை எதிர்க்க வேண்டும் என்றார்கள். ஆனாலும், அவர் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்தமையை எதிர்த்தார்கள். அது பிழையானது எனச் சுட்டிக் காட்டிய சிறிகாந்தா ஐயா, சிவாஜிலிங்கம் ஐயா அவர்கள் அதில் இருந்து வெளியேறினார்கள். இன்று கொள்கைக்காக எம்மோடு இணைந்துள்ளார்கள்.

கீழ் மல்லவத்து ஓயா திட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் 1500 சிங்கள குடியேற்றங்களை குடியேற்ற நிகழ்ச்சி நடைபெறுகிறது. தந்திரிமலை பகுதியில் நீர்த்தேககம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு 1500 குடும்பங்களுக்கு காணிகள் வழங்க ஏற்பாடுகள் நடைபெறுகிறது. இந்தத் திட்டத்தால் உண்மையில் அங்கு 15 முஸ்லிம் குடும்பங்கள் நிலங்களை இழந்தன. ஆனால் நீர்திட்டம் என்ற பெயரில் சர்வ தேச நிதியில் எமது பிரதேசத்தில் சிங்கள குடியேற்றத்தைக் கொண்டு வர முயல்கிறார்கள். இதை சுட்டிக் காட்ட முதுகெலும்பற்ற அடைக்கலநாதன் தான் வரவு செலவுத் திட்டத்தில் நன்மை இருப்பதாக கூறி அதை ஆதரித்துள்ளார். ஏன் என்று சொன்னால் சர்வதேச சமூகத்தின் முன்னால் அவர் அரசை பாதுகாக்கின்றார்.

அனுரகுமார திஸாநாயக்கா இனவாதத்தின் மொத்த வடிவம். முதல் இருந்த அரசாங்கங்கள் நேரடியாகயுத்தகுற்றங்களில்சம்பந்தப்பட்டுள்ளார்கள். ஆனால் அனுர அந்த அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து, இராணுவத்திற்கு ஆள்களை திரட்டிக் கொடுத்தார்கள். இவர்கள் புதியவர்கள் என்ற மாயைத் தோற்றம் கட்டியெழுப்பபடுகிறது. அதை வைத்து தமிழ் மக்களது ஆதரவை பெற்று தமிழ் இனப்படுகொலையை மறைத்து இங்கு அபிவிருத்தி தான் பிரச்சினை என எமது மக்களை வைத்து சொல்ல வைக்கும் செயற்பாடு நடைபெறுகிறது. எமது விரலை வைத்து கண்ணை குத்தும் செயற்பாடு நடக்கிறது.

ஆகவே, எம்மை நாம் ஆளும் நிலை உருவாக வேண்டும். பேரினவாத கட்சிகள் விரட்டியடிக்கப்பட வேண்டும். அவர்களது முகவர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டும். கொள்கைமாறாதஒருதலைமைத்துவத்தை பலப்படுத்த, எமது சமத்துவமான நிர்வாகத்தை ஏறபடுத்த ஒரு சந்தர்ப்பத்தை கொடுங்கள். உள்ளூர் அதிகாரத்தை கைப்பற்றி தேசிய ரீதியல் இனப் பிஹரச்சினைக்கு தீர்வு காண ஆணை தாருங்கள் எனத் தெரிவித்தார். 100

# தேசிய மக்கள் சக்தி காரைதீவு தேர்தல் அலுவலகம் திறப்பு

(சகாதேவராஜா)

தேசிய மக்கள் சக்தி கட்சியின் காரைதீவு 6,7.10 பிரிவுகளின் 4 ஆம் வட்டாரத்திற்கான தேர்தல் அலுவலகம் சனிக்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

அந்நிகழ்வில்திகாமடுள்ளமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.ஆதம்பாவா மற்றும் மஞ்சுள ரத்நாயக ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

முன்னதாக தேர்தல் பரப்புரை அலுவலகம் தேசிய மக்கள் சக்தியின் காரைதீவு பிரதேச ஆலோசகர் ரி.தெய்வநாயகம் முன்னிலையில் அதிதிகளால் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச சபையில் போட்டியிடும்






தேசிய மக்கள் சக்தி சார்பான வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏமாற்றம்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வது குறித்து ஆராய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் சட்ட மா அதிபருமான றியன்சி அர்சகுலரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த மாதத் தொடக்கத்தில் பொதுமக்களின் கருத்தையும் பொது சமூக அமைப்புகளின் கருத்துக்களையும் இந்தக் குழு பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் சமூகங்களின் கருத்துக்களையும் பெறவும் குழுவிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்வது தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தலைமையில் கடந்த 11 ஆம் திகதி நீதி அமைச்சில் நடைபெற்றதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வந்துள்ளது.

தற்போதுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வதே தற்போதைய ஆளும்தரப்பின் கொள்கை என்று இந்தக் கலந்துரையாடலின் போது நீதி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

புதிய சட்ட முன்வரைவு உலகளாவிய பயங்கரவாதத்தையும் சவால்களையும் எதிர்கொள்ளக்கூடிய ஒன்றாக இருக்கவேண்டும் என்றும், இலங்கையின் அரசமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்திற்கான மனித உரிமைகளை மீறக்கூடாது என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

இந்தத் திருத்தச் சட்டங்களைக் கொண்டுவருவதற்கு முந்தைய ஆளும்தரப்புக்கள் உரிய முறையில் செயற்படவில்லை எனவும், தற்போது நியமிக்கப்பட்ட குழு, இந்தச் சட்டத்தை இரத்து செய்வது தொடர்பான பொருத்தமான விடயங்களை மிகக் குறுகிய காலத்திற்குள் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் நீதி அமைச்சர் குழுவின் உறுப்பினர்களுக்கு தெரிவித்துள்ளார் என்று நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது குறித்து இன்று நேற்றல்ல மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்திலிருந்து வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அப்போது முதல் இப்படிக் குழுக்களை நியமிப்பதும் அறிக்கை பெறுவதும் பின்னர் புதிய சட்டத்திற்கான வரைவு ஒன்று தயாரிக்கப்படுவதும் இதற்கு முன்னரும் இடம்பெற்றிருக்கின்றன. அமைச்சரவை உப குழுக்கள், ஆலோசனைக் குழுக்கள் என்று பல வகைப் பெயர்கள் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. ஆனால், மீண்டும் மீண்டும் ஒவ்வொரு ஆட்சியிலும் புதிது புதிதாகக் குழுக்கள் நியமிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இத்தகைய உத்திகள் காலத்தைக் கடத்துவதற்கானதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை போன்றவற்றை ஏமாற்றுவதற்கானதாகவும் கடந்த காலங்களின் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அதையேதான் இப்போதைய ஆளும்தரப்பும் செய்கிறதோ என்கிற சந்தேகத்தைப் புதிய குழுவின் நியமனம் ஏற்படுத்துகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலீடான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. வர்த்தமானியிலும் வெளியிடப்பட்ட இந்தச் சட்ட வரைவு முன்னைய சட்டத்தைவிட மிக மோசமானது என்கிற எதிர்ப்பு இலங்கைச் சமூகத்தின் மத்தியிலிருந்தும் பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்புக்களில் இருந்தும் கிளம்பியதைத் தொடர்ந்து அந்தச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் முயற்சி கிடப்பில் போடப்பட்டது.

இப்போது இந்த விவகாரத்தில் மீண்டும் தொடக்க நிலைக்கே ஆளும்தரப்புச் சென்றிருப்பதும் இதுபோன்ற காலம் கடத்தும் உத்தி என்பதாகவேபடுகின்றது. இந்தப் பணிகளை விரைவில் முடிக்கும்படி நீதி அமைச்சர் தெரிவித்தாலும் அதற்கான காலக்கெடு எதனையும் அவர் தெரிவிக்கவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் 'ஜிஎஸ்பி பிளஸ்' வரிச் சலுகை விடயத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டமும் தொடர்புபட்டுள்ள நிலையில் இந்தக் குழு நியமனம் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சமாளிக்க, ஏமாற்ற எடுக்கப்படும் கண்துடைப்பு என்று கருதுவதற்கும் அனைத்து வாய்ப்புக்களையும் தருகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட, அந்தச் சட்டத்தை நீக்குவோம் என்று வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த ஒரு ஆளும்தரப்பே இவ்வாறு குழுக்களை நியமித்து காலத்தை இழுத்தடிக்க முயற்சிப்பது முற்றிலும் ஏமாற்றம் தருகிறது. இந்தச் சட்டத்தை நீக்குவதுதான் ஆளும்தரப்பின் கொள்கை முடிவு என்றால் முதலில் சட்டத்தை நீக்கிவிட்டுப் பின்னர் புதிய சட்டத்தைக் கொண்டு வருவது தொடர்பாகக் குழுக்களை நியமித்து ஆலோசனைகளையும் வரைவுகளையும் பெறுவதே செய்யப்படவேண்டியது.




# டிரம்பிற்கு எதிராக உலகம் :

## அமெரிக்காவில் போராட்டம் - ஐரோப்பாவில் எதிர்ப்பலை!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

கடந்த வாரம் வாசிங்டனில் பல்லாயிரம் மக்கள் டிரம்பிற்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். ஐந்து இலட்சம் மக்கள் அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களிலும் டிரம்பிற்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றனர் என அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்தன.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் கடுமையான வரி உயர்வு காரணமாக அமெரிக்காவின் பல நகரங்களில் 05/4/25 சனிக்கிழமை பெருமளவு மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

### அமெரிக்காவில் போராட்டம்:

அத்துடன் அமெரிக்க அதிபர் டிரம்ப் நாட்டை நிர்வகிக்கும் முறை குறித்து சீற்றமடைந்துள்ள மக்களே இந்த ஆர்ப்பாட்டங்களை பல மாநிலங்களிலும் முன்னெடுத்தனர்.

இதுவே டிரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அமெரிக்காவில் இடம்பெற்ற மிகப்பெரிய ஆர்ப்பாட்டங்கள் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களிலும் இடம்பெற்றதாக தெரிவித்துள்ள ஊடகங்கள்,




1200 இடங்களில் டிரம்பிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் குறிப்பிடத்தக்க அளவில் இடம்பெற்றன.

சர்வதேச அரங்கில் பாரிய வரிவிதிப்பதையும், அந்நாடுகளின் அரசியலில் தலையிட வேண்டாம் என்று இந்த ஆர்ப்பாட்டங்களை சிவில் உரிமை அமைப்புகள், தொழிற்சங்கங்கள் உட்பட 150க்கும் மேற்பட்ட அமைப்புகள் வலியுறுத்தி இதில் கலந்துகொண்டன.

அத்துடன் அமெரிக்காவில் வலுக்கட்டாயமாக அரசாங்க ஊழியர்களை வேலையிலிருந்து நீக்குவது, சமூக பாதுகாப்பு நிர்வாக அலுவலகங்களை மூடுவது, குடியேற்றவாசிகளை நாடுகடத்துவது, சுகாதார பாதுகாப்பு திட்டங்களை குறைப்பது போன்ற டிரம்ப் நிர்வாகத்தின் நடவடிக்கைகள் குறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பெரும் சீற்றத்தை வெளியிட்டனர்.

சில ஊடகங்களின் கூற்றுப்படி வாசிங்டனிலும் புளோரிடாவிலும் மட்டும் சுமார் 50,000 மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த டிரம்ப் எதிர் ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்வேறு விதமான பதாகைகளை ஏந்தியிருந்தனர். ரஷ்யாவுடன் உறவுகளை வலுப்படுத்துவதற்கு டிரம்ப் நிர்வாகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளிற்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசம் போட்டனர்.

### டிரம்பிற்கு எதிராக உலகம் :

இதே வேளை டிரம்பிற்கு எதிராக உலகமெங்கும் பல்வேறு காலகட்டங்களில் பல நாடுகளில் போராட்டங்கள் நடைபெற்றன. வாசிங்டனில் அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவியேற்ற நாளில் இருந்து அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளிலும் அவருக்கு எதிராக பல்வேறு கண்டன போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

டிரம்ப் அரசு புலம் பெயர்ந்தோரை கையாள மிகப்பெரிய நாடுகடத்தல் திட்டத்தை தொடங்கியது. இது அமெரிக்காவில்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# டிரம்பிற்கு...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

மட்டுமன்றி, உலகின் பல்வேறு நாடுகளிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**ஐரோப்பிய நாடுகளில் எதிர்ப்பலை:**

டிரம்பின் நிலைப்பாட்டை எதிர்த்து ஐரோப்பிய நாடுகளிலும் மக்கள் பதாகைகளுடன் பேரணி நடத்தினர். டிரம்பின் குடியேற்ற கொள்கைகளை



எதிர்த்து பாரிசில் பதாகைகளுடன் பேரணி நடத்தினர்.

அத்துடன் பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறும் உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்டதற்கு இங்கிலாந்து தலைநகர் லண்டனில் ஏராளமானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். குடியேற்று வாசிகள், பிறப்புரிமை, குடியுரிமை போன்றவற்றின் டிரம்பின் கொள்கைகளுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

மெக்சிகோவில் டொனால்ட் டிரம்பின் குடியேற்று நடவடிக்கைக்கு எதிராக எல்லை வெளியில் பாரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன் போது மெக்சிகோ வளைகுடாவின் பெயரை அமெரிக்க வளைகுடா என்று மாற்றியதற்கு அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

**பிலிப்பைன்ஸில் எதிர்ப்பு :**

பிலிப்பைன்ஸில் அமெரிக்க ராணுவத்தை விரிவுப்படுத்துவதை கண்டித்து மணிலாவில் போராட்டங்கள் நடைபெற்றன.

பெல்ஜியத்தில் தொழிற்சங்கங்கள், சமூக அமைப்புகள், பெண்ணியவாதிகள் மற்றும் இனவெறி எதிர்ப்பு ஆர்வலர்கள் டிரம்பின் திட்டங்களுக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டனர்.

டிரம்ப் அமெரிக்க கோடீஸ்வரர்களுக்கு சேவை செய்யும் தீவிர வலதுசாரி என்றும் அவர்கள் குற்றம் சாட்டி உள்ளனர். இவ்வாறு டிரம்பிற்கு எதிராக உலகமெங்கும் பாரிய போராட்டமும் எதிர்ப்பு குரல்களும் எழுந்துள்ளன.

**அமெரிக்க மக்களின் எழுச்சி:**

தற்போது அமெரிக்காவில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் ஏனையவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உந்துதலை வெளிப்படுத்தும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். அமெரிக்க மக்களை எழுச்சியடைய செய்வதே இதன் நோக்கம் என இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பலர் தெரிவித்தனர்.

இந்நிலையில் டிரம்ப் தன்னை எதிர்ப்பவர்களிற்கு எதிராக ஆக்ரோசமாகவும், வன்முறைபோக்குடனும் நடந்து கொண்டுள்ளதால் பலர் தங்கள் எதிர்ப்புகளை வெளியிட தயங்குகின்றனர் எனவும் பலர் தெரிவித்தனர்.

டிரம்பிற்கு எதிராக குரல் கொடுக்கின்றோம் என்பதை மௌனமாக உள்ள அமெரிக்கர்கள் பார்க்கவேண்டும் என்பதே இந்த ஆர்ப்பாட்டங்களின் நோக்கம் என தெரிவித்தனர். இந்த துணிச்சலை பார்க்கும்போது டிரம்பை எதிர்ப்பதற்கு அமெரிக்க மக்களும் துணிவார்கள் என்று கூறப்படுகிறது.

மேலும் அமெரிக்காவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளதாக ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்த மூவ்ஒன் அமைப்பினை சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் அமெரிக்க அதிபர் டிரம்பின் முன்னால் மண்டியிட தயாராகவுள்ள மக்களிற்கும் ஸ்தாபனங்களிற்கும் அதனை எதிர்ப்பதற்கான மக்கள் இயக்கம் உள்ளது என்ற செய்தியை தெரிவிக்க விரும்புகின்றோம் என ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நமது அரசியல் தலைவர்களிற்கு டிரம்பின் நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கான துணிச்சல் உள்ளது என்றால் அவர்கள் அதற்கு தயாராகயிருந்தால், நாங்கள் அவர்களின் பின்னால் நிற்போம், என தெரிவித்துள்ள அவர் அரசியல் தலைவர்கள் ஜனநாயகத்தினை பாதுகாக்க வேண்டும் என இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.




முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# சித்திரைத் திருநாள் சிறப்புடைத் திருநாள்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ...... ஆஸ்திரேலியா

கொண்டாட்டங்கள் – வாழ்விலே புத்துணர்வை ஏற்படுத்தி உற்சாகமாய் இருப்பதற்கு நல்ல தொரு வழி காட்டிகளாய் விளங்குகின்றன எனலாம். ஒவ்வொரு கொண்டாட்டங்களும் வருகின்ற வேளை அதாவது வருவதற்கு முன்னும் வந்த நிலையிலும் வாழ்விலே ஒரு வசந்தம் வந்து அமைவதை காணமுடிகிறது எனலாம். ஆனந்தம் வருகிறது ! அகமகிழ்வு வருகிறது ! வீடும் நாடும் விடிவு பெற்றது போல ஒரு எண்ணங்கூட உதயமாகிறது என லாம். அதனால்த்தான் ஆண்டுதோறும் கொண்டாட்டங்கள் அமைந்திருக்கின்றன. மாதத் தில் கொண்டாட்டம். வருஷத்தில் கொண்டாட்டம் என்று கொண்டாட்டங்கள் என்பது வாழ் விலே நிறைந்தே இருக்கிறது.நிறைந்தே இருக்கும் வண்ணம் சமூகக் கட்டமைப்பு வளர்ந்து வந்துள்ளது என்பதை மனமிருத்தல் அவசிய மானதேயாகும். அந்தவகையில் சித்திரைத் திருநாளைப் பற்றி எண்ணிப் பார்ப்பது பொருத்தமாய் இருக்கு மென்று எண்ணுகிறேன்.

சித்திரைத் திருநாளை தமிழர் திருநாள் என்பதா? தைத் திருநாளை தமிழர் திருநாள் என் பதா ? என்று ஒரு போராட்டமே நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் போராட்டம் அரசியல் மயப்படுத்தப்பட்டு, அரசியல் கட்சிகளின் கொள்கையாக்கப்பட்டு ; அக்கட்சிகள் சார்பாக அறிஞர்கள் தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்தி பெரும் சர்சையினை உருவாக்கி ஆட் சிகள் மாறும் வேளை காட்சிகள் மாறியதையும் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனாலும் பலரும் சித்திரைத் திருநாளையே தமிழர்தம் திருநாளாகக் கொண்டாடி வருகிறார்கள் என் பதும் நோக்கத்தக்கதே. திருநாளினைக் கொண்டாடுவதன் நோக்கமே மனமகிழ்வும் மன நிறைவுமேயாகும். அதனை விட்டு விட்டு அங்கும் – வீண் தர்க்கமும் குதர்க்கமும் பேசி அங்கும் ஒரு பஞ்சாயத்தை அரங்கேற்றுவதும் பொருத்தமுடையதா ? சிந்தித்தால் தெளிவு வரும் அல்லவா ?



சித்திரை மாதத்தின் முதல் நாளையே புத்தாண்டாக கொண்டாடி வருகிறார்கள் தமிழர்கள் என்பதற்கு சான்றுகள் பல இருக்கின்றன என்று அறியக்கிடக்கிறது. வானியலையும் , பரு வங்களின் சுழற்சியையும் அடிப்படையாகக் கொண்டே சித்திரைத்திருநாள் புத்தாண்டாக மலர்ந்திருக்கிறது எனலாம். பூமியானது சூரியனை ஒருமுறை சுற்றிவருவதற்கு எடுக்கும் காலம்பனிரெண்டு மாதங்களாகும்.சூரியன் பூமத்திய ரேகையில் பிரகாசிக்கும் மாதம் ஆண்டினது தொடக்கமாகக் கருதப்படுகிறது.சூரியன் முதல் ராசியான மேஷ ராசிக்குள் நுழைவதிலிருந்து அந்த ராசியைவிட்டு வெளியேறும் வரையுள்ள காலமானது சித்திரை மாதமேயாகும்.

அகத்தியரின் ' பன்னீராயிரத்தில் ' பங்குனி மாதத்தை கடை மாதம் என்று காட்டப்படு கிறது.சங்க இலக்கியம் தமிழர்தம் பொக்கிஷமாகும். அந்த பொக்கிஷத்திலேயே சித்திரைத் திருநாள் – புத்தாண்டு என்பதற்கு சான்றுகள் இருக்கின்றன என்பதும் மனங்கொள்ளத்தக் கதாகும்.' நெடுநெல் வாடையில் 160–161 வரிகளில் ' திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக ' என்று நக்கீரர் பகுருகின்றார். இப்பாடலில் வரும் ' ஆடுதலைக்கு ' மேஷ ராசி என்று பத் துப்பாட்டு ஆராய்ச்சி நூலின் வாயிலாக முனைவர் மா.இராசமாணிக்கனார் தெளிவு படு துகிறார். ' தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை ' என்று மலைபடுகடாம் என்னும் சங் கப்பாட்டு காட்டுகிறது. அதாவது – பங்குனி மாதத்தின் கடைசி சித்திரை மாதத்தின் முதல் நாளிலேதான் வேங்கை மரங்கள் வழக்கமாகப் பூக்கும் என்பது இதன் பொருளாகும். அது மட்டுமல்ல ' கணிவேங்கை நன்னாளே நாடி மலர்தலால் ' என பழமொழி நானூறு சுட்டிக் காட்டுவதால் – இளவேனில் காலத்தின் துவக்கமானாது சித்திரையே என்பதும் அதுவே தலைநாளாகமிளிர்ந்ததுஎன்பதுதெளிவாகத்தெரிகிறதல்லவா?.

சீவகசிந்தாமணியிலும் கோடை காலமே முதலாவது பருவம் என்று சுட்டுவதும் நோக்க த்தக்கதே. மேலும் ' புஷ்பவிதி ' என்னும் நூலிலே ' சித்திரை முதல் மாதமே ' என்று கமலை ஞானப் பிரகாசரும் விளக்கம் அளித்துள்ளமையும் கருத்திருத்த வேண்டியதே.

சூரியனின் சுழற்சியை வைத்துத்தான் புத்தாண்டைக் கணக்கிடலாம். அப்படித்தான் கண க்கிடப்பட்டும் வருகிறது அதனால்தான் சித்திரைத் திருநாள் புத்தாண்டாய் மலர்கிறது. தைமாதம் என்பது மகர ராசியில் வருகிறது. மகர ராசி என்பது வானிலைப்படி பஞ்சாங் கப்படி பத்தாவது ராசியாகும். பத்தாவது ராசியில் வரும் தை எப்படி புத்தாண்டாய் அமை ய முடியும் ? மேஷ ராசிதான் முதலாவது ராசி என்பதற்கே ஆதாரங்கள் இருப்பதாலும் அதனையே இலக்கியச் சான்றுகள் உறுதிப் படுத்துவதாலும் மேஷத்தில் சூரியன் நுழை யும் காலமாக சித்திரையே பொருந்தி வருவதாலும் புத்தாண்டினைச் சித்திரையில் கொண் டாடி வருவதே வரன் முறையாக இருக்கிறது என்பது சித்திரைத் திருநாள் கொண்டாடி மகிழும் வேளை யாவரும் மனமிருத்தல் நல்லது என்று கருகிறேன்.

இளவேனில் காலத்தில்த்தான் சித்திரையே ஆரம்பிக்கின்றது. இதனையே வசந்தகாலம் என்று அழைக்கின்றனர்.வசந்த காலத்தில்த்தான் மாமரங்களில் மாந்தளிர்களும் மலர்க ளும் பூத்துக் குலுங்குகின்றன. வேப்பமரங்களிலும் வேப்பம்பூக்களும் பூத்துக் குலுங்குகின்றன.மாமரங்கள் பூத்துக் குலுங்கினால் நல்ல சுவையான மாங்கனிகள் கிடைக்கும். சுவைத்தால் இன்பமே பெருகும். வேம்பின் குணமோ கசப்பு. வேம்பம் பூவின் நிலையும் கசப்புத்தான். கசப்பான வேம்பும் , இனிப்பான மாவும் ஜொலிக்கும் காலம்தான் சித்திரைத் திருநாள். அதாவது இனிப்பும் கசப்பும் நிறைந்ததுதான் மனித வாழ்க்கை என்பதை இயற் கையே உணர்த்தி பாடம் நடத்தும் காலம்தான் புத்தாண்டாய் வருவிருக்கும் சித்தைரைத் திருநாள் என்பதை மனமிருத்தல் அவசியமானது என்று கருதுகிறேன்.

சித்திரை என்று நினைத்தாலே பெரும் எதிர்பார்ப்புகள் வந்தே நிற்கும்.'பங்குனிபோய் சித்திரை வந்தால் பத்திரிகை வந்திடும் கல்யாணப் பத்திரிகை வந்திடும் ' என்று ஒரு பாட்டும் பிரபல்யமாய் ஒலிப்பதைக் கேட்டி ருக்கிறோம். அப்படி என்றால் – சித்திரை என்பது வாழ்வில் நல் முத்திரை பதிக்க வரப் போகிறது என்ப துதானே அர்த்தம் ! சித்திரைத் திருநாள் தமிழர்தம் உள்ளங்களில் உவ கையினைஏற்படுத்தும் நாளாகவே அமை கிறது எனலாம்.




புத்தாடை வாங் குவது ! விதம்விதமாய் பலகாரங்கள் செய்வது! பட்டாசு




மத்தாப்பு என்று வாங்கிக் குவிப் பது ! வீட்டுக்கு வெள்ளை அடிப்பது! வீட்டை அழகு படுத்துவது ! ஒரே கல கலப்புத்தான் !

சித்திரைப் புதுவருடம் என்றவுடன் மருத்துநீர் முனவந்து நிற்கும் ! மருத்துநீர் என்பது மருத்துவத்தின் ஒரு பங்களிப்பே எனலாம். தமிழர்கள் எதைச் செய்தாலும் அதற்குள் மருத்துவத் தையும் இணைத்தே விடுவார்கள். இது தமிழர்களின் அத் தனை கொண்டாங்களி லும் ஒட்டிக் கொண்டே இருக்கும்.

தாழம்பூ , தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம்,கோமயம், கோரோசனை, மஞ்சள் , திற்பலி, சுக்கு, இவற்றை நீரிலே கலந்து காய்ச்சி எடுப்பதுதான் ' மருத்து நீர் ' என்னும் சித்திரைத் திருநாள் விஷேட மருந்துவம் ஆகும். இந்த மருத்து நீரை அனைவரும் தலையில் வைத்து பின்னர் நீராடு தல் என்பது அவசியமானதாகச் சொல்லப்பட்டு பெரும்பாலும் அனைவருமே செய்து வருகி ன்றனர். கொண்டாட்டம் என்றாலும் அதிலும் ஆரோக்கியத்தை அடிப்படையாக வைத்திருப் பது கவனதுக்குரியது அல்லவா ?

மருத்துநீர்வைத்துநீராடியபின்னர்வாங்கியபுத்தாடைகளை அணிவது மரபாக இருந்து வருகிறது. புத்தாடை அணிந்து கோவில் சென்று தரிசனம் செய்து பெரியவரிடம் ஆசி பெற்று பலவகையான பட்சணங்களை உண்டு மகிழ்வதும் வழமையாக இருக்கிறது.

பெரியவர்களிடம் ஆசிபெறுவது , கைவிசேசம் வாங்குவது சித்திரைப் புத்தாண்டில் மிக வும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பெரியவர்களின் வாழ்த்து என்றுமே துணைநிற்கும் என்பதும் அவர்களிடம் பெறும் கைவிசிசேசம் அந்த ஆண்டு முழுவதலும் இலட்சுமி கடா ட்சமாய் ஜொலிக்கும் என்பதும் மனத்தில் பதியும் அசையாத நம்பிக்கை எனலாம்.

கோவில்களில் திருவிழாக்கள் இக்காலத்தில் சிறப்பாக இடம் பெறும். பெரும்பாலும் அனைவருமே கோவில் வழிபாட்டை தவறாமல் பயபக்தியுடன் செய்திடத் தவறவே மாட் டார்கள்.

கலைவிழாக்களுக்குக் குறைவிருக்காது. விளையாட்டு நிகழ்சிகளும் நடை பெறும். கிழக் கிலங்கைப் பகுதிகளில் ஊஞ்சல் கட்டி அதில் சிறியவர் முதல் பெரியவர் வரை அமர்ந்து ஆடிப்பாடி மகிழ்வது சித்திரைத் திருநாளில் பெரிய தொரு விசேசமாய் நடந்து கொண்டே இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் இந்த நிலை இல்லை என்றே சொல்லாலாம். கிழக்கிலங் கையில் சில பகுதிகளில் புத்தாடை வாங்கினால் முதலில் அதனை வீட்டிலிருக்கும் தென் னைக்கு கட்டி அதன் பின்னே அவர்கள் தாங்கள் கட்டிக் கொள்ளும் வழமையும் இருந்து வருகிறது. ஆனால் இம்முறை யாழ்ப்பாணப்பாணப் பகுதில் இல்லை எனலாம்.

அச்சு முறுக்கு, சீனிப்பணியாராம், பயத்தம் பணியாரம், கிழக்கிலங்கையில் சித்திரையில் அதிகமாக எல்லா வீடுகளிலுமே செய்வார்கள். யாழ்ப்பாணத்தில் இவை எல்லாம் செய்தா லும் அவர்கள் தங்களுக்கென்று சிறப்பான பலவற்றையும் செய்து பகிர்ந்துண்டு மகிழ்வார் கள்.

உறவுகள் ஒன்று சேர்வது , உணவுகளில் அறுசுவை சேர்ப்பது, பக்கத்து வீட்டாருக்குப் பகிர் ந்து மகிழ்வது, வறுமையில் இருப்பார்க்கு இயன்றவற்றைக் கொடுத்து அவர்களையும் மகி ழ்விப்பது, இயன்றவரை தான தர்மம் செய்வது சித்திரைப் புத்தாண்டில் இடம்பெறும் முக்கி யமான பண்பாடு எனலாம்.

இலங்கையில் சித்திரைப் புத்தாண்டினை சிங்கள பௌத்தர்களும் கொண்டாடி மகிழ்கிறார் கள் என்பதும் அரசாங்க பொதுவிடுமுறை தினமாக இருக்கிறது என்பதும் மனங்கொள்ளத் தக்கதாகும். தமிழர்கள் பலவித பலகாரங்கள் செய்வார்கள். ஆனால் சிங்கள பௌத்தர்கள் பாற்சோறு வைத்துப் பரிமாறி மகிழ்வார்கள். அவர்களும் பெரியவர்களிடம் வெற்றிலை யில் கைவிசேசம் பெற்று ஆசியும் பெறுவார்கள். ஆளும் இனமும் , ஆளப்படும் இனமும் கொண்டாடி மகிழும் கொண்டாட்டமாய் சித்திரைப் புத்தாண்டு இலங்கையில் விளங்கு வதும் முக்கியத்துவம் மிக்கதாய் தென்படுகிறது அல்லாவா !

காலைக்கதிர்
Kalaikkathir

# கிளிநொச்சியில் தமிழ் சிங்கள புத்தாண்டு பொருள் கொள்வனவில் மக்கள் ஆர்வம்

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் ஆடைகளை கொள்வனவு செய்வதில் பொதுமக்கள் அதிகளவில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிந்தது.

தமிழ் சிங்கள புதுவருடப்பிறப்பு முன்னிட்டு கிளிநொச்சியில் வியாபாரம் களை கட்டியுள்ளது,

கிளிநொச்சி நகரின் கனகபுரம் பகுதியில் உள்ள புடைவை வியாபார நிலையங்களில் அதிக சனநெரிசல்களையும் எமது கமெராக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு தமிழ் சிங்கள புத்தாண்டானது இன்று (திங்கட்கிழமை) கொண்டாடப்படும் நிலையில் கிளிநொச்சி நகருக்கு அதிகளவிலான மக்கள் வருகை தந்து புத்தாடைகள், வெடிகள், இனிப்பு பண்டங்களை கொள்வனவு செய்ததை அவதானிக்க முடிந்தது.

113

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா வேட்பாளர்கள் அறிமுகம்



வவுனியாவில் பொக்கு தமிழ் நினைவுத் தூபியில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா நகரசபை முன்றிலில் அமைந்துளள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் தீபம் ஏற்றி மலர் தூபி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்ற பின் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வேட்பாளர் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னனியானது தமிழ் மக்கள் பேரவையாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான செ.கஜேந்திரன், தமிழ் தேசியக் கட்சியின் தலைவரும், சிரேஸ்ட சட்டத்தரணியுமான ஸ்ரீகாந்தா, ஜனநாயக தமிழரசுக் கட்சியின் பிரதிநிதி நாவலன் மற்றும் வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். 100

# கலைமகளில் கங்கை இல்லம் சம்பியனான்

(சகாதேவராஜா)

சம்மாந்துறை கல்விவலய வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் கங்கை இல்லம் சம்பியனாகத் தெரிவுசெய் யப்பட்டுள்ளது.

இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் கே.தியாகராசா தலைமையில் வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.





இதில் கங்கை ,காவிரி, ஜமுனை இல்ல மாணவர்களுக்கிடையிலான போட்டியில் கங்கை இல்லம் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றதுடன் காவிரி இரண்டாம் இடத்தினையும் ஜமுனை இல்லம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை கல்விவலயத்தின் வலயக்கல் விப் பணிப்பாளர் எஸ்.மகேந் திரகுமார் கௌரவ அதிதிக ளாக பிரதிக் கல்விப்பணிப் பாளர்களான பி.எம்.வை. அறபாத் முகைத்தீன், பி.பரம தயாளன், எச்.நைறோஸ்கான் வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.மோகன் விசேட அதிதிகளாக உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.முஸ்தாக் அலி ஆசிரிய ஆலோசகர் எம்.வை.ஏ.நாஸீர் மற்றும் முன்னாள் பாடசாலையின் அதிபர்கள் நாவிதன்வெளிக் கோட்டபாடசாலைகளின் அதிபர்கள் பொது அமைப்புக் களின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

# மங்கலமாம் சித்திரை மனமகிழ வைக்கும்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ..... ஆஸ்திரேலியா

வசந்தம் மலர வருகின்ற சித்திரையே
சுகந்தம் பரப்பி சுகந்தருவாய் சித்திரையே
அகங்கள் நிறைய ஆனந்தம் அத்தனையும்
அள்ளியே நீவருவாய் அழகான சித்திரையே

பற்பல தத்துவங்கள் உள்ளடக்கி நிற்கின்றாய்
பண்பாடு கலாசாரம் தாங்கியே ஒளிர்கின்றாய்
இத்தரையில் எதிர்பார்க்கும் ஏற்றமுடை திருநாளாய்
சித்திரையே விளங்குகிறாய் சிறப்புடனே வந்திடுவாய்

இலங்கையில் சித்திரை இன்பத்தை அளித்துவிடும்
இருவினமும் சித்திரையை ஏந்திடுவார் மகிழ்வுடனே
செந்தமிழும் சிங்களமும் கொண்டாடும் திருநாளாய்
சித்திரைத் திருநாள் இலங்கையில் மலர்ந்திடுமே

தமிழகம் கொண்டாடும் வடநாடும் வரவேற்கும்
உலகின் பலவிடங்களிலும் சித்திரை சிறந்திடுமே
புத்துடுப்பு புத்துணர்வு பூரிப்பு அத்தனையும்
சித்திரையின் முத்திரையாய் சிறப்பாக அமைந்திடுமே

இருப்பவரும் மகிழ்வர் இல்லாரும் மகிழ்வர்
இயன்றவரை சித்திரையை ஏற்றவரும் இன்புறுவர்
சமயமும் கலக்கும் சன்மார்க்கம் உடனிணையும்
சித்திரையில் அத்தனையும் சொத்தாக அமைந்திருக்கும்

புத்தாடை அணிவார் புதுக்கணக்கும் தொடங்குவார்
பட்டாசும் வெடிப்பார் பட்சணங்கள் பலசெய்வார்
மருத்துநீர் தலைவைத்து மனநிறைய பலநினைத்து
நீராடி நிற்பார் நிறைவுடனே வாழ்வதற்கு

கோவிலுக்குச் செல்லுவார் குறைகளைய வேண்டுவார்
காதலுடன் கடவுளை கைகூப்பித் தொழுதிடுவார்
சோதனைகள் வேதனைகள் சுமையகல வேண்டிடுவார்
சுகமான நினைவுகளைச் சுமந்தபடி தொழுதிடுவார்

மூத்தோரை வணங்குவார் முழுவாசி பெற்றிடுவார்
பெற்றவரை வணங்கிடுவார் பேரன்பாய் தழுவிடுவார்
சுற்றத்தார் சூழவே சுவையாக உண்டிடுவார்
சுந்தரத் தமிழிசைத்து ஊஞ்சலாடி மகிழ்ந்திடுவார்

சித்திரையைச் சிறப்பிக்க பட்டிமன்றம் நடக்கும்
சிங்காரத் தமிழிசை தென்றலில் கலக்கும்
கலை விழாக்கள் கலகலப்பாய் இருக்கும்
களிப்புடனே சித்திரையும் முத்திரையைப் பதிக்கும்

சித்திரையில் கோவில்களில் சிறப்பாக உற்சவங்கள்
பக்குவமாய் நடக்கும் பக்தியுடன் கூடிடுவார்
தேரோட்டம் உற்சவம் ஊர்கூடித் தேரிழுப்பார்
ஆன்மீகம் சித்திரையை அரவணைத்தே நிற்கும்

மங்கலமாம் சித்திரை மனமகிழ வைக்கும்
மனநிறைவு மனவமைதி வந்துவிட வைக்கும்
சந்தததும் வாழ்வினிலே சகலதுமே அமைய
வந்துவிடும் திருநாளாய் சித்திரையும் வரட்டும்



## மகிழ்ச்சியும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டாடுவதற்கு இந்நாட்டு மக்கள் தொன்றுதொட்டு செயல்பட்டு வருகின்றனர். இக்காலத்தில் மரங்கள் கனிகளால் நிறைந்து, விளைச்சல் செழித்து, களஞ்சியங்கள் நிரம்பி, அனைவரின் உள்ளங்களிலும் செழிப்பின் ஒளி பிறக்கும்.

சிங்கள தமிழ் புத்தாண்டு என்பது சரியான நேரத்தில் துல்லியமாக செயல்படுவதை பழக்கப்படுத்திய, நன்றி உணர்வை வளர்த்தெடுத்த கலாசார விழாவாகும். மேலும், இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையேயான உறுதியான தொடர்பையும், ஒருவருக்கொருவர் இடையேயான உறவுகளின் மதிப்பையும் வெளிப்படுத்தும் இவ்விழா, அனைத்து வேறுபாடுகளையும் மறந்து புதிய மனிதர்களாக முன்னேறுவதற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது.

இந்த புத்தாண்டில் வழக்கமான சவால்களுடன் புதிய சவால்களும் நம் முன் உள்ளன. அவற்றை சரியாக நிர்வகித்து நாட்டையும் மக்களையும் முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்வது நம் அனைவரினதும் கூட்டுப் பொறுப்பாகும். அத்தகைய சூழ்நிலைகளில் குறுகிய கருத்தியல்களில் ஒட்டிக்கொண்டிருப்பது தவிர்க்கப்பட வேண்டும் என நாங்கள் நம்புகிறோம். எனவே, இதன் உண்மையான பொருளை புரிந்துகொண்டு, கூட்டு முயற்சியின் மூலம் நமக்கு எதிரான சவால்களை வென்று அமைதி, மகிழ்ச்சி, செழிப்பு நிறைந்த புத்தாண்டிற்கு நாம் அனைவரும் செயல்பட வேண்டும். ஒரு நாடாக நாம் எதிர்கொள்ளும் சவால்களை அனைவரும் ஒன்றிணைந்து வெற்றிகரமாக எதிர்கொண்டு, அந்த சவால்களை வென்று அனைவரையும் உள்ளடக்கிய செழிப்பை நோக்கிய இந்த பயணத்தில், அனைவரின் உள்ளங்களிலும் துக்கம், கண்ணீர், வலி இல்லாமல் மகிழ்ச்சியும் செல்வமும் நிறைந்த புத்தாண்டிற்காக ஒன்றிணையுமாறு உலகெங்கிலும் உள்ள இலங்கையர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் அமைதி, மகிழ்ச்சி, செழிப்பு நிறைந்த இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

## இலங்கையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்பையும், நிறைந்த ஆரோக்கியத்தையும், மிகுந்த சந்தோஷத்தையும், பல்வேறு வெற்றிகளையும், நிம்மதியான வாழ்க்கையையும் வாரி வழங்கும் ஆண்டாக அமைய வேண்டும். இது விடயத்தில் இயற்கைமீது மட்டும் பொறுப்பை வழங்காது, அந்த இலக்குகளை மக்கள் அடைவதற்கு அரசாங்கம் என்ற வகையில் நாம் உரிய களத்தை அமைத்துக்கொடுப்போம்.

'ஒரு நாடாக நாம் மீண்டெழுந்தால் நிச்சயம் மேற்கண்டவாறு நாம் வேண்டும் பிரார்த்தனை ஈடேறும். எனவே, இலங்கையர்களாக இன நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு நாம் ஒன்றாக முன்னோக்கி செல்ல வேண்டும்.

'இனவாதம், மதவாதம், குலபேதம் எல்லாம் அடுத்த தலைமுறைக்கு செல்லக்கூடாது. அதனை இந்த தலைமுறையுடனேயே இல்லாதொழித்துவிட வேண்டும். எமது நாடு இன்னும் முன்னேறாமல் இருப்பதற்கு இவைகூட பிரதான காரணங்களாகும். அவற்றை நாம் நிச்சயம் மாற்றியமைப்போம்.

'எனவே, மக்களின் கனவை நனவாக்குவதற்கு புத்தாண்டில் மேலும் மேலும் துணிச்சலுடன், நல்லெண்ணம் கொண்டு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என உறுதியளிக்கின்றேன்.' - என்றார்.

## கடலோர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசர எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடல்சார் பேரிடர் சூழ்நிலைகளின் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கு இதனூடாக முடியுமெனவும் அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள், கடற்படையினர் மற்றும் கடல்சார் சமூகத்தினருக்கு உடனடி மற்றும் நேரடி தொடர்பு அமைப்பை வழங்குவதன் மூலம் கடலோர காவற்படையினரின் செயற்பாட்டு தயார்நிலையை மேம்படுத்த இது உதவுமெனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இலங்கையின் கடற்கரையோரப் பாதுகாப்பு மற்றும் கடல் சூழலைப் பாதுகாப்பதில் பாதுகாப்பு அமைச்சகம் முக்கிய பங்கு வகிக்கிறது என்றும், கடலில் உயிரையும் சொத்துக்களையும் பாதுகாப்பது, எண்ணெய்க் கசிவு மேலாண்மையில் முதல் பதிலளிப்பவராகப் பதிலளிப்பது, போதைப்பொருள் மற்றும் மனித கடத்தலை எதிர்த்துப் போராடுவது மற்றும் தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை நடத்துவது உள்ளிட்ட கடலில் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு தீவிரமாக பங்களிக்க முடியும் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கத்துவக் கட்சியான தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறீகாந்தா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாராவது, அல்லது எந்தக் கட்சியாவது இந்த தமிழ்த் தேசியப் பேரவையை பலப்படுத்த வேண்டுமென்று விரும்பினால், அதற்கான சந்தர்ப்பமும், அதற்கான கதவுகளும் திறந்துதான் இருக்கின்றன.

அனைவரையும் அழைத்துச் செல்வதற்கு தமிழ்த் தேசியப் பேரவை தயாராகவே உள்ளது. பல கட்சிகள் இருக்க முடியாது. பல அரசியல் முகாம்கள் இருக்க முடியாது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரு கட்சி, ஒரு பாசறை, ஒரு முன்னணி, ஒரு பேரவை என்பதை உறுதி செய்ய வேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




நான்கு வகை நிலத்திலும்
காணி விற்பனைக்கு!
Premium Lands with 100% Legal Security
8 இலட்சம் முதல்
* தவணைக் கட்டண வசதிகள் செய்து தரப்படும்.
விளையாட்டு, ஆரோக்கியம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு
என 20+ இற்கு மேற்பட்ட வசதிகளுடன்..!
முல்லை
எழுதுமட்டுவாழ்
மருதம்
கிழக்கு அரியாலை
குறிஞ்சி
மலையகம்
(ஹப்புத்தளை நகர்)
நெய்தல்
மட்டக்களப்பு
(வாவிக் கரையோரம்)
ஏப்ரல் 14th திகதிக்கு முந்திய பதிவுகளுக்கு விசேட விலைக்கழிவு
இப்போதே முன்பதிவு செய்யுங்கள்!
இயற்கையின் அரவணைப்பில் எதிர்காலத்திற்கான சிறந்த முதலீடு..!
இனிமையான வாழ்விற்கு..!
GOOD GIFT
PROPERTY DEVELOPERS (PVT) LTD.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
+94 77 743 5557

காலைக்கதிர் Kalaikkathir

# முஸ்லிம் சமூகத்தினது நன்மதிப்பை பெற்றவர் பெரியார் ஹிஸ்புல்லாஹ்

## அரசியல் செயற்பாட்டாளர்– சினீஸ் கான் கருத்து





இலங்கையை அரசியலை பொறுத்தவரையில் முஸ்லிம் அரசியல் வித்தியாசமானது விசித்திரமானது. முஸ்லிம் அரசியல்வாதிகள் பலர் வாழ்த்து மரணித்துவிட்டார்கள் இருந்தபோதிலும் ஒரு சிலரே மக்கள் மனதில் வாழ்த்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தற்போது முஸ்லிம் அரசியலில் பல கட்சிகள் உருவாகி பல தலைமைகள் உருவாகி பெயரளவில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் முழு முஸ்லிம் சமூகத்தின் நன்மதிப்பை பெற்ற ஓர் அரசியல் தலைவராக கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் திகழ்கிறார்.

மறைந்த மாமனிதர் எம்.எச்.எம். அஷ்ரபின் மரணத்திற்கு பிற்பாடு முஸ்லிம் அரசியல் ஆளுமை ஒருவரை குறிப்பிடலாம் என்றால் அது ஹிஸ்புல்லாஹ் தான் என்பதற்கு மாற்றுக்கருத்துக்கள் இல்லை அவரது ஆளுமைக்கு முழு சமூகமும் சாட்சி.

கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் அவர்களுடைய கம்பஹா, புத்தளம் மாவட்டத்திற்கான தேர்தல் பிரசார விஜயம் அதனை ஊர்ஜிதப்படுத்துகிறது. மக்கள் கட்சி வேறுபாடுகளுக்கப்பால் வரவேற்று தமது அன்பை பகிர்ந்திருந்தனர்.

கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் எனும் ஆளுமை என்றும் வெல்லட்டும்.

# மாளிகைக்காட்டில் மு.கா.வின் கூட்டம்

காரைதீவு பிரதேச சபைத் தேர்தல் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாளிகைக்காடு பிரதேச அமைப்பாளரும், காரைதீவு பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான எம்.எச்.எம். இஸ்மாயில் தலைமையில் சனிக்கிழமை மாளிகைக்காட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட செயலாளர் ஏ.சி.சமால்தீன், காரைதீவு பிரதேச சபையின் மரச்சின்ன வேட்பாளர்களான எம்.எச்.எம். நாசர், எட்.எம்.ரௌபி, பட்டியல் வேட்பாளர்கள் மற்றும் மாளிகைக்காடு பிரதேச ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.













காலைக்கதிர் Kalaikkathir

# தன்னை ஜனாதிபதியாக இன்னும் உணர்ந்துகொள்ளாதவர் அநுர

## முன்னாள் தவிசாளர் ரனூஸ் இஸ்மாயில்

(நூருல் ஹுதா உமர்)

அச்சுறுத்தி வாக்கு கேட்பதும் வாக்கு போட வேண்டாம் என்று சொல்வதும் பாரதூரமான குற்றம். பிள்ளையானை அரசியல் உள்நோக்கத்துடன் கைது செய்திருந்தால் அதுவும் குற்றம். ஜனாதிபதியின் உரைகள் சொல்ல வருவது என்ன? ஊழல், வன்முறை, குற்றம் இவைகளை தடுப்பதற்கும் சீர் செய்வதற்கும் சட்டங்கள் இருக்கிறது. சட்டம் ஒழுங்கை நிறைவேற்றக்கூடிய நிறுவனங்களை சரியாக இயக்கினால் இந்த குற்றம் ஊழல் வன்முறை மற்றும் அனைத்து விதமான சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைபாடுகள் நிர்வாக சீர்கேடுகள் இவைகள் எல்லாவற்றையும் நிவர்த்திக்க முடியும். இதுதான் உண்மையான முறைமை மாற்றம். சிஸ்டம் சேஞ்ச் என சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை முன்னாள் தலைவருமான ரனூஸ் இஸ்மாயில் அறிக்கை ஒன்றினூடாக தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் -

ஜனாதிபதியின் அண்மைய கிழக்கு மாகாண விஜயத்தின் போது அவர் ஆற்றிய உரைகள் முறைமை மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய தகைமை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறதா எனும் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பாரிய சமூக அழுத்தங்களுக்கு மத்தியில் பிணையில் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கும் ருஷ்டியின் கைது குறித்தும் அதற்கான காரணம் குறித்தும் ஜனாதிபதி சொன்ன விளக்கம் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.



அவருடைய விரைவான பிணை விடுதலையும் அவரை கைது செய்ததற்கான காரணமும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற மிகவும் கடுமையான கொடூரமான சட்டம் ஒன்றை பயன்படுத்தி அவரை கைது செய்திருக்க தேவையில்லை எனும் நியாயமான விடயத்தை சட்டம் தெரிந்தவர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள்.

மட்டக்களப்பில் ஜனாதிபதி உரையாற்றுகின்ற பொழுது மட்டக்களப்பு மாநகர சபையின் அதிகாரத்தை தேசிய மக்கள் சக்திக்கு வழங்காவிட்டால் மத்திய அரசாங்கத்தில் இருந்து அபிவிருத்திக்கான நிதிகளை ஒதுக்க மாட்டோம் என்றும் நாங்கள் இப்பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறோம். குறிப்பாக நாங்கள் ஒரு கைதை (இங்கே இவர் மறைமுகமாக முன்னாள் அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் என்று அழைக்கப்படும் பிள்ளையான் என்பவருடைய கைதைத்தான் கூறினார்) செய்திருக்கிறோம் என்று கூறினார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டிருக்கும் பிள்ளையான் அவர்களுடைய கைதுக்கும் மட்டக்களப்பு மாநகர சபை வெற்றிக்கும் ஒரு நாட்டின் ஜனாதிபதி இவ்வாறு தொடர்புறுத்தி பேசியது கொஞ்சமும் நாகரீகம் அல்ல. பிள்ளையான் அவர்களுடைய கைது ஒரு அரசியல் உள்நோக்கம் கொண்டது என்பதை ஜனாதிபதி தெளிவாகவே கூறியிருக்கிறார். எங்களுக்கு வாக்களியுங்கள் என்று வாக்கு கேட்பது ஜனநாயகம் ஆனால் இன்னும் ஒருவருக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும் அவ்வாறு வாக்களித்தால் அரசாங்கமாக நாம் செய்ய வேண்டிய கடமையில் இருந்து தவறி விடுவோம் என்று அச்சுறுத்தி வாக்களிக்காமல் தடை செய்வதும் ஜனநாயக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் மிகவும் பிழையானது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீது இந்த நாட்டு மக்கள் வைத்த மிகப்பெரிய நம்பிக்கை காப்பாற்றப்பட வேண்டும் என்பதே எனது அவா.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலமும் ஜனாதிபதியின் அதிகாரம் இருக்கும் போது எதிர்க்கட்சி போன்று இன்னும் குறை கூறிக்கொண்டு குற்றம் கூறிக்கொண்டும் இருக்காமல் காரியத்தை முன்னிறுத்தி வாக்கு கேட்பது இந்த அரசாங்கத்திற்கு ஆரோக்கியமானது என்று தெரிவித்துள்ளார்.




# வவுனியா மாநகர சபை தேர்தல் அறிக்கையை சனியன்று வெளியிட்டது தேசிய மக்கள் சக்தி

தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாநகர சபைக்கான தேர்தல் விஞ்ஞாபனம் பல்வேறு புதிய திட்டங்களுடன் சனிக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை என 5 உள்ளூராட்சி மன்றங்களிலும் தேசிய மக்கள் சக்தி முதல் முறையாக போட்டியிடுகின்றது.

அதில், வவுனியா மாநகர சபைக்கான தேர்தல் விஞ்ஞாபனத்தை பல முன்னேற்றகரமான அபிவிருத்தி திட்ட நோக்கங்களை கொண்டதாக, முதலாவது தேர்தல் விஞ்ஞாபனமாக வவுனியாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதில், இரவு 10 மணியில் இருந்து அதிகாலை 5 மணிக்குள் மாநகரசபை கழிவு அகற்றல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு காலையில் ஏற்படும் அசௌகரியங்களை நிறுத்தல், விசேட ஒழுங்கமைக்கப்பட்ட போக்குவரத்து திட்டம், வவுனியா குடியிருப்பு வைரவபுளியங்குளம் ஆகிய பகுதிகளில் விசேட உடற் பயிற்சிக்கான திட்டம், மாநகரசபை பகுதியில் வாழும் மக்களுக்கு பாதிக்காத வகையில் சோலைவரி அறவிடுதல், நூலகத்தை மேலும் மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி நலத்திட்டங்கள் குறித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா மாநகரசபையின் பண்டாரிக்குளம் வட்டார அலுவலத்தை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோர் இணைந்து திறத்து வைத்த பின்னரே அதனை இணைந்து வெளியிட்டனர். இதில் கட்சியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். 100

# வவுனியா தெற்கில் தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்தது தேசிய மக்கள் சக்தி

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் கந்தபுரம் வட்டாத்திற்கான தேசிய மக்கள் சக்தியின் பிரச்சார அலுவலகத்தை கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க திறந்து வைத்தார்.

வவுனியா, கந்தபுரம் வட்டாரத்திற்குட்பட்ட தோணிக்கல் பகுதியில் சனிக்கிழமை மாலை குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.







இதன்போது வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும பட்சத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பிலும், தமிழ் மக்களின் ஆணையுடன் தமிழ் தவிசாளர், தமிழ் பிரதி தவிசாளர் நியமிக்கப்பட்டு பிரதேச நிர்வாகத்தை முன்னெடுப்பது தொடர்பிலும், உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள் தொடர்பாகவும் இதன்போது அமைச்சாரால் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், அமைச்சருடன் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், கட்சியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். 100




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.04.2025இல் வெளியிடப்பெற்றது